Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 47

National Tamil Daily தேசிய தினசரி

குரோதி பங்குனி 16 திங்கள் பிறை 25 (29-3-65) திங்கட்கிழமை

விலைகளில்

தேசிய அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறியதைத் தொடர்ந்து குறிப்பாக கொழும்பிலும் மற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் பொருள்களின் விலைகள் திடீரெனக் குறைந்துவிட்டது. இம்பது சதம் வரை விற்பனையான 'செவன் ஒ குளக்' என்ற பீனேட் தற்பொழுது கொழும்பில் பல கடைகளி 15 சதம் முதல் 20 சதம் வரை விற்பனை செய்யப் பட்டுவருகின்றன. இது தவிர துணிகளின் விலைகளும் ஓரளவு குறைந்து விட்டது- கொழும்பில்.

இறக்குமதி செய்யப்பட்டு கொழும்பில் விற்பனை செய்யப்படும் பீனேடுகளுடன், உணவுப் பொருள்களின் விலைகளும் திடீரெனக் குறைந்துவிட்டன. தீப்பெட்டிகளும் தாராளமாகக் கட்டுப்பாட்டு விலைக்குக் கிடைக்கக்கூடியதாகவிருக்கின்றன

இருந்தும் இல்லாத டாக்டர்கள்; ஆஸ்பத்திரியில் நோயாளர் அவதி

யாழ்ப்பாணம், திங்கள்

ஆறு டாக்டர்களும் 8 அப்போதிக்கரிமாரும் கடமையாற்றும் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி 'வெ நோயாளர் பகுதியில் சனிக்கிழமை இரவு எவருமே கடமையாற்றவில்லை. உள்நோயாளர் பகுதியைச் சேர்ந்த அப்போதிக்கரி ஒருவரே தனது கடமைகளுடன் மற்றும் இருகடமைகளையும் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் பல நோயாளர்கள் வீணான தாமதத்திற்கு உள்ளாக நேரிட்டது.

(6-ம் பக்கம் பார்க்க)

இங்கு வீழ்ச்சியில்லை!

'பனியகாட்' சாரங்களின் விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. மாவு உணவுப் பொருள்களின் விலைகளிலும் குழந்தைகளின் நஸக் மற்றும் உணவு பொருள்களின் விலைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இல்லாத பொருள்கள் இப்பொழுது கடைகளில் தாராளமாக கிடைக்கின்றன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் நேற்றுவரை பல பொருள்களுக்குத் தட்டுப்பாடு இருந்தே வந்தது. பொருள்களின் விலைகளும் இங்கு குறைந்ததாகத் தெரிய வில்லை.

எதிர்க் கட்சித் தலைவர்

சிறிமா

மாஜிமந்திரிகளுக்கு ஆறுதல் மொழி

கொழும்பு, ஞாயிறு

புதிய பார்லிமெண்டில் திருமதி சிறிமாபண்டாரநாயகா எதிர்க்கட்சித் தலைவராக இருப்பார். உலகில் பிரதமர் பதவி வகித்தமுதல் பெண்மணி எனப்பெயர் பெற்ற திருமதி சிறிமா உலகில் எதிர்க் கட்சித் தலைவராகப் பணியாற்றிய முதல் பெண் என்று பெயர் பெறுகிறார்.

கொழும்பு பொரளையிலுள்ள தமது சகோதரர் ஒருவரின் நிலத்தை தமது கொழும்பு வாசஸ்தலமாக்கிக் கொண்டுள்ள திருமதி சிறிமா பண்டாரநாயகா தமது கூட்டரசாங்கத்தில் மந்திரி பதவி வகித்தவர்களை அழைத்து மேற்று ஆலோசனை நடத்தினார். தம் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றத் தீர்மானித்திருப்பதாக திருமதி சிறிமா அவர்களிடம் கூறினார். எதிர்க்கட்சியைப் பலப்படுத்த வேண்டுமென்றும் மனந்தளராது அடுத்த போராட்டத்துக்குத் தயார் செய்யவேண்டுமென்றும் அவர் சொன்னார். கட்சி அங்கத்தவர்களின் கூட்டமொன்றைக் கூட்டவிருப்பதாகவும் அவர் கூறினார்.

தாய்லாந்துக்கு 7-வது கடற்படை

பாங்ஹாக், மார்ச் 29

தாய்லாந்தை நெருக்கடிகள் எதுவும் எதிர்நோக்கினால் அமெரிக்க ஏழாவது கடற்படை உடன் உதவிக்கு வருமென்று தாய்லாந்து பிரதமர் தெரிவித்துள்ளார்.

மந்திரியின் முதல் வேலை

பம்பலப்பிட்டி, ஞாயிறு

திரு. ஐ. எம். ஆர். ஏ. இரிய கொல கல்விமந்திரிப் பதவியை ஏற்றதும் ஆசிரியர் மாற்றச் சபையிலிருந்து திரு. வி. துரைசிங்கத்தை மாற்றும்படி உத்தரவிட்டுள்ளார் என அறியவருகிறது.

மந்திரி பதவியை ஏற்றதும் இரவே அவர் முதல் செய்த வேலையாகும்.

பொதுச்சபை கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழரசுக்கட்சியின் பொதுச் சபை அடுத்த மாதம் 10-ம் திகதி யாழ்ப்பாணத்தில் கூடுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக் காரியாலயத்தில் தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கும் பொதுச்சபைக்கூட்டத்தில் தமிழ் சமஸ்டிக்கு தமி

"உரிமை பெறுவதற்கு மக்கள் ஒத்துழைப்புத் தேவை"

திரு. அமிர்தலிங்கம் பேச்சு

கழிபுரம், ஞாயிறு

"தமிழரசுக்கட்சியின் பிரமுகரான திரு. திருச்செல்வம் தமிழரசுக்கட்சிக் கொடியுடனே சென்று தமது பதவியை ஏற்றார். அவர் பதவியேற்றபோது தமிழ்முழக்கம் செய்தனர். எமக்கு உரிமை மறுத்தால் நாம் என்ன செய்வோம் என்பதனை மக்கள் அறிவர். நமது இனத்தின் உரிமைகளைப் பெறும் சந்தர்ப்பத்தை கண்டு பயன்படுத்திப் பாடுபட தமிழ் மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது" என்று லட்டுக்கோட்டையில் எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு கைமாறு தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பனிப்புலம் அம்பாள் சனசமூகநிலைய முன்றலில் திரு. த. குமாரசாமி தலைமையில் நடந்த திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு பாராட்டு விழாவில் வடக்கு வாசிகசாலை நடாத்தப்பட்ட வரவேற்புபசாரக் கூட்டத்தில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசியதாவது:

கடந்த காலத்தில் பதவி அடிப்படையில்தான் ஒப்பந்தங்கள் எழுதப்பட்டு வந்தன. உரிமையைப் பெறுவதற்கு பதவிதான் மூலகாரணம் என்று நினைத்தவர்களுக்கு பதவி அல்ல இலட்சியம்தான் மூலகாரணம் என்பதனை நாம் உணர்த்தியுள்ளோம். இதனை நாம் தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்ததன் மூலம் வெளியுலகத்திற்கு உணர்த்தியிருக்கின்றோம். நாம் தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி எமது இலட்சியத்தை அடைவதற்கு பாடுபடுவோம். நமக்கும்—ஐக்கியதேசியக் கட்சிக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களை வெளியிடுவது தவறான முயற்சிகள்

(6-ம் பக்கம் பார்க்க)

சமாதான தீர்வுக்கு உதவுக

ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு பிரதமர் துங்குவின் அவசர செய்தி

கோலாலம்பூர், மார்ச் 29

நீடித்து வரும் மலேசிய பிரச்னைக்கு உடனடித் தீர்வுகாண உதவி அளிக்குமாறு மலேசிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் ஆசிய, ஆபிரிக்க காமன்வெல்த் நாடுகளுக்கு ஒரு கோரிக்கை விடுத்துள்ளார்.

'மலேசிய பிரச்னை நீடித்து வருவதால், அபாயமும் அதிகரித்து வருகின்றது. இந்த பிரச்னைக்குத் தீர்வுகாணுவிடால் மற்றைய ஆசிய நாடுகளின் பாதுகாப்புக்கும் பங்கம் ஏற்படலாம்' என்றும் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் ஒரு செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஆசிய, ஆபிரிக்க காமன்வெல்த் நாடுகள் இந்தப் பிரச்னையில் தலையிட்டு, சமுதாயமான தீர்வொன்றைக்காண வழிவகுக்கவேண்டும் என்றும் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அச் செய்தியில் கேட்டுள்ளார்.

இந்தக் கோரிக்கை பல நாடுகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

இப்படியும் நடந்தது

வவுனியா, ஞாயிறு

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது இங்குள்ள சில வாக்காளிப்பு நிலையங்களுக்கு வாக்களிக்க வந்த சில பெண்கள் வாக்களிக்காமலேயே திடீரென வீடு திரும்பி சிறிதுநேரம் கழித்து மீண்டும் வந்து வாக்களித்தனர்.

வாக்களிக்க வருபவர்களின் ஆள்காட்டி விரலில் சிவப்பு நிற அழியாமை பூசப்படும் விஷயம் அறிந்த இப்பெண்கள், தங்களது கை நகங்களுக்கு பூசப்பட்டிருக்கும் 'நியூ டெக்ஸ்' எனப்படும் ஒரு வகைச் சாயம், வாக்களிப்பதைத் தடைசெய்யலாம் எனக் கருதி வீடு திரும்பி சாயத்தை கரண்டிவிட்டு திரும்பி வந்து வாக்களித்தனர்.

மலேசியாவின் நடவடிக்கைகள் பற்றி விளக்கஞ்செய்வதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆராய படும்,

நன்றியும் பாராட்டும்

யாழ்ப்பாணம், திங்கள்

சங்கானை தமிழரசு வாலிப முன்னணியின் கூட்டமொன்றில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மிகப்பெரும்பான்மையான வாக்குகளால் திரு. அமிர்தலிங்கம் தெரிவு செய்யப்பட்டமைக்கு வாக்காளர்களுக்கும் இரவு பகலாக அயராது உழைத்த வாலிபர்களுக்கும் இக்கிளை நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறது.

தேசிய மந்திரிசபைக்குள்ளிருந்து தமிழர் நலன்காண உழைக்க முன்வந்த திரு. மு. திருச்செல்வத்துக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் அதேவேளையில் உரிமைபோருக்காக மந்திரிப் பதவியை மறுத்தமது பாராளுமன்ற உறுப்பினரின் உறுதியையும் இக்கிளை பாராட்டுகின்றது.

சிறுபான்மைத் தமிழர் ஒருவரை நியமன உறுப்பினராக்கும் முயற்சிக்கும் எமது கிளை ஆதரவு தெரிவிக்கின்றது.

கொழும்பு

இந்து வா. ச. பாராட்டு

பம்பலப்பிட்டி, திங்கள்

உடுப்பிட்டித் தொகுதிக்கு திரு. மு. சிவசிதம்பரம் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தினர் அவருக்கு பாராட்டு தெரிவித்து நல்லாசி அனுப்பியுள்ளனர்.

திரு சிவசிதம்பரம் கொழும்பு இந்து வாலிப சங்கத்தின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'டி' கோலை கொல்ல முயன்றனர்

[illegible] மார்ச் 29

பிரெஞ்ச் அதிபர் ஜெனரல் 'டி' கோலை இரண்டாவது தடவையாக மூன்றாவது கொலை செய்ய சதித்திட்டமிட்டதாக நேற்று ஒருவரை பிரெஞ்ச் பொலிசார் கைதுசெய்தனர்.

மணிவாக்கு

நெல்லிலே உமியும் அரிசியும் என இரண்டு பகுதிகள் இருப்பதுபோல, ஒவ்வொரு சமயத்திலும், சாதாரண மனிதர்கள் அதை ஒப்புக் கொள்ளுவதற்கு ஏற்ப முக்கியமானவையும் முக்கியமல்லாதவையும் இருந்தே தீர வேண்டும். வளரும்இளஞ் செடியொன்றைப் பாதுகாக்க ஒருவேலி அவசியமாவதுபோல சமயத்திற்கும் பாதுகாப்பைத்தரும் அந்த உமி அவசியமாகும்.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 16;வ (29-3-65)

உள்ளே புகுந்தும் உரிமை பெறலாம்

திரு. டட்லியின் 'தேசிய மந்திரிசபை' பதவியேற்றுவிட்டது. இதில் ஒரேயொரு தமிழரும் ஒரேயொரு முஸ்லிமும் இடம்பெற்றுள்ளனர். இது போதாது.

மந்திரிசபையில் சேருமாறு விடுத்த அழைப்பை ஏற்க தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் தமிழரசு எம். பி.க்களும் மறுத்துவிட்டனர். காரணம் எதுவாயினும் அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்க ஒப்புக்கொண்ட இந்த இருகட்சியினரும் மந்திரிசபையில் சேர்ந்து தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைகளை அதிகாரத்துடன் பெறக்கூடிய நல்ல சந்தர்ப்பம் இது. தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்குத் தடை இருக்குமானால் இக்கட்சிகளுமே தங்கள் ஆதரவை வாபஸ் பெற்றுக் கொண்டு மந்திரிசபையிலிருந்து வெளியேறலாம். மந்திரிசபையில் சேர மறுப்பதன் மூலம் மந்திரிப்பதவியைப் பங்கீடு செய்வதில் பதவிப் போட்டியேற்பட்டுவிட்டதென்றும், மந்திரிப்பதவி வகிக்கத் திறமையானவர்கள் இல்லையென்றும் வீண்வதந்திகள் கிளப்புவதற்கு இடமளிப்பதாகும். காங்கிரஸ் மந்திரிப்பதவியேற்பதா, தமிழரசார் மந்திரிப்பதவியேற்பதா? என்ற சர்ச்சைக்கும் இடம் கொடுப்பதற்கு இது சமயமல்ல, நல்ல சமயம். இதை நழுவவிடாமல் மந்திரிசபையில் தமிழ்ப்பிரதிநிதிகள் சேர்ந்து உரிமைகளைப் பெறுவதுடன் தமிழ்ப்பேசும் மக்களின் எதிர்கால வாழ்வுக்கும் வழிவகுக்கலாம். வெளியேயிருந்து உரிமைகளைக் கேட்டுக் கொண்டிருப்பதைவிட உள்ளே புகுந்து உரிமைகளைப் பெறுவது சலபம் சிபந்தனையுடன் கூடிய ஒப்பந்தம் ஒன்றிலாகுவதால் தமிழ்ப்பேசும் மக்களைக் காட்டிக் கொடுத்துவிட்டதாக இப்பொழுது எந்தக் குற்றச்சாட்டும் வர இடமில்லை

வியட்நாம் நிலைமை

வியட்நாம் நிலைமை மோசமாகி வருகிறது. இது உலக அமைதிக்கு நிச்சயம் நல்லதல்ல.

வடவியட்நாமில் அமெரிக்கத் தாக்குதல்கள் நிற்கவில்லை. மாறாகத் தொடர்ந்து நடைபெறுகிறது. பெரிய அளவில் தாக்குதல் நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள தாகவும் தெரிகிறது. இதே சமயம் சோவியத் யூனியன், சீன கியூபா ஆகிய நாடுகள் வடக்கு வியட்நாமுக்கு ஆயுத உதவிகள் மட்டுமன்றி "தொண்டர்களை"யும் அனுப்பத் திட்டமிட்டுள்ளன. "தொண்டர்கள்" என்பவர்கள் இராணுவத்தினராகவே இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை இதனால் வியட்நாமில் யுத்தம் முனையும் அதுவிரிவடைந்து வல்லரசுகளுக்கிடையில் மோதல் ஏற்பட்டு உலகயுத்தமாக மாறவும் கூடும்.

வியட்நாம் பிரச்னை உள்நாட்டுப் பிரச்னையல்ல. அந்நியர் தலையீடு வியட்நாமைப் போர்க்களமாக்கி அந்நாட்டு மக்களைத் தங்கள் பலப்பரீட்சைக்குப் பலியாக்குகின்றன. இந்தோசீனாவுக்கான 1954-ம் வருடத்திய ஜெனிவா மகாநாடு மீண்டும் கூடி இப்பிரச்னைக்கு ஒரு தீர்வுகாண இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. ஐ.நா. ஸ்தாபனமும் தகுந்த முயற்சிகளை மேற்கொள்ளவில்லை, இவ்விஷயத்தில் இனியும் காலதாமதம் செய்வது உலக அமைதிக்குக் கேடுவிளைக்கும். இலங்கை உள்ளிட்டு நடுநிலைமைநாடுகள் தான் இனி அவசர அவசரமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இனியும் தாமதம் செய்வது இலங்கைக்கும் இதர நாடுகளுக்கும்கூட ஆபத்தாகவே முடியும். வியட்நாமிலிருந்து அந்நியர் அனைவரையும் வெளியேற்ற ஐ.நா. வை வற்புறுத்த வேண்டியது நடுநிலைமை நாடுகளின் கடமை.

தமிழரசாரின் ஒப்பந்த விபரம் என்ன?

தொழில் தகராறுகள் தோன்றுமா? 21 கோரிக்கைகள் தலையெடுக்குமா?

— அரசியல் மாணவன் —

திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா ஆட்சி பீடத்தில் அமர்ந்த போது நாட்டுமக்களில் ஒரு பிரிவினர் மத்தியில் கரைகடந்த உற்சாகம் தோன்றியது. இப்பொழுது திரு. டட்லியின் புதிய 'தேசிய அரசாங்கம்' பதவி ஏற்றதும் பொதுவாக நாட்டு மக்கள் மத்தியில் உற்சாகம் அதிகரித்துள்ளது. மக்கள் நிம்மதியாக மூச்சு விடுகின்றனர்.

வேறுபட்ட கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கொண்டவர்கள் இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற போதிலும் "நாட்டை முன்னேற்ற வேண்டும்" என்ற பொது நோக்கமும் ஒரு பொதுத் திட்டமும் இருப்பதாகத் தோன்றுகிறது. தேசிய ஒற்றுமையின் அவசியத்தையும் இந்த அரசாங்கம் உணர்ந்துள்ளது தெளிவாகிறது. என்றாலும் பிரதமர் திரு டட்டியின் பொறுப்பு சுலபமல்ல.

∴ ∴ ∴

ஆட்சி பீடத்திலிருந்து வெளியேறிய மூன்றாம் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா, "மூன்று மாதத்தில் திரும்பி வருவேன்", என்று பிரதமரின் உத்தியோக வாசஸ்தலமான 'அலரி மாளிகை" யிலிருந்து புறப்படுகையில் கூறிச் சென்றிருக்கிறார். தேர்தல் பிரசாரத்தின் போது, "டட்லி அரசாங்கம் சாம்பார் அரசாங்கமாகவே இருக்கும். அது அதிகநாள் நிலைக்காது" என்று தாம் கூறியது "தீர்க்க தரிசனம்" என்று திருமதி சிறிமா இன்னும் கருதுகிறார் போலும்! முன்பு திரு. டட்லியும் "பதவிக்கு வந்த அரசாங்கங்களைப் பார்த்து ஆறுமாதம் கூட நிலைக்காது" என்றுதான் கூறி வந்தார். தேர்தலியால் ஏற்படும் ஏமாற்றம் இப்படி ஹேஷ்யங்கள் கூறவைக்கும் போலும்! இதைத் தவிர திருமதி சிறிமாவின் "மூன்றுமாத" கூற்றுக்கு வேறு அர்த்தம் எதுவும் இருக்குமென எண்ண இடமில்லை!

∴ ∴ ∴

சகலபிரிவு மக்களையும் சேர்த்து பலதரப்பட்ட கொள்கையினருக்கும் இடமளித்து 'தேசிய அரசாங்கம்' ஒன்றை திரு. டட்லி இப்பொழுது அமைத்துள்ளது போன்று திருமதி சிறிமா பண்டாரநாயகாவும், சில மாதங்களுக்கு முன் இடதுசாரியினரைத் தமது அரசாங்கத்துடன் சேர்த்துக் கொள்ளச் செய்த முயற்சியில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொண்டு அவர்களது ஒத்துழைப்பையும் பெற்றிருந்தால் இன்று நிலைமை முற்றிலுமாக இருந்திருக்கும். பத்திரிகைகளின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டதும் அதன் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம்.

புதிய மந்திரிகள் சிலர் உடனடியாக செயலில் இறங்கியுள்ளனர்; கல்வி இலாகாவில் உதவி வித்தியாதிபதி திரு. ஆரைசிங்கத்தை ஆசிரியர் இடமாற்றச் சபையிலிருந்து இடமாற்றம் செய்ய கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்! பாடப்புத்தகம் ஒன்றிலும்மாற்றங்கள் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

காணியில் இலங்கைக் ஸஹகமிஷனராகக் கடமையாற்றும் திருமதி லொரைன் சேனரத்தினவின் பதவியை நீடிப்பதில்லையென வெளிவிவகார அமைச்சு முடிவு செய்துள்ளது

இவை தவிர புதிய அரசாங்கம் வந்ததும் சிலர் தாமாகவே பதவியிலிருந்து வெளியேறுகின்றனர். பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக கடமையாற்றிய 'இலங்கைப்புகழ் திரு. என். கியு. டயஸ் பதவியிலிருந்து விலக முன்னறிவித்தல் கொடுத்துள்ளாராம். இலங்கைப் போக்குவரத்துச் சபையிலிருந்து மூவர் வெளியேறுகின்றனர்.

இன்னும் எத்தனையோ!

∴ ∴ ∴

புதிய அரசாங்கம் வெளிவிவகாரக் கொள்கையிலும் சில மாற்றங்களை உடனடியாகவே தெரிவித்துள்ளது. இந்திய-சீன எல்லையில் இந்தியாவுக்கே இலங்கை ஆதரவளிக்கும். இதன் மூலம் இந்தியாவுக்கு சிறிது நிம்மதி! அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகளின் நஷ்ட ஈட்டுப் பிரச்னைக்கும் விரைவில் தீர்வு அதன்மூலம் அமெரிக்க உதவியும் மீண்டும் கிடைக்கும்.

தனியார் துறைக்கு ஊக்கமளிப்பது புதிய அரசாங்கத்தின் மற்றொரு கொள்கை. அந்நிய முதலீடுகள் இங்கு வருவதற்கு இதுவாய்ப்பளிக்கும்.

பிரமச்சாரிகள்

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா ஒரு பிரமச்சாரி. அவர் மந்திரி சபையிலும் மற்றும் பிரமச்சாரிகளும் உள்ளனர், காணி மந்திரி திரு. சி. பி. டி. சில்வாவும் உள்நாட்டு மந்திரி திரு. டபிள்யு. தகநாயக்காவும் பிரமச்சாரிகளே!

∴ ∴ ∴

திரு. டட்லியின் மந்திரிசபையில் பெரும்பாலும் அனுபவம் வாய்ந்தவர்களே மந்திரிபதவி யேற்றுள்ளனர். நிதி மந்திரியாகப் பதவியேற்றுள்ள திரு. யு. பி. லன்னிகாயகா இதற்கு முன் மந்திரிபதவி வகிக்கவில்லையாயினும் உதவி மந்திரியாகப் பதவி வகித்திருக்கிறார். கல்வி மந்திரியாகப் பதவியேற்றுள்ள திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை முன்பு ஒரு தடவை உதவி மந்திரியாகப் பணியாற்றியுள்ளார்.

(6ம் பக்கம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

இருந்து, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அமுல்நடத்துவது பற்றியும் அதில் செய்ய வேண்டிய சில அவசியதிருத்தங்களை பற்றி பேசிவிட்டு வருவாரென்றும், அவருக்கு இந்த நியமனஸ்தானம் காத்திருப்பதாயும் தெரிகிறது.

தொண்டமானின் ஆதரவால் தான், யு. என். பி. பதவிக்கு வரமுடிந்ததென்றும், குறைந்தது 11 ஸ்தானங்கள் மலைநாட்டிலே யு. என். பி. பெறமுடிந்ததற்கும், அவரே காரணமென்றும் விஷயமறிந்த ஓர் அரசியல் அன்பர் தெரிவித்தார்.

குறிப்புகள்:-

நாற்பதுசதம்விற்ற 'லைவன் ஒகினாக்' பினேட், கொழும்பு டைபாலையில் இப்போது 15 சதத்துக்கும் 10 சதத்துக்கும் கூட தாராளமாகக்கிடைக்கிறதாம். ஐந்து ரூபாய் விற்ற சாரம் திடீரென மூன்றரைக்குக் குறைந்துவிட்டது. பதுங்கி மறைந்திருந்த மோட்டார் டயர்கள் இப்போது மலிவாகக் கிடைக்கிறதென்று ஒரன்பர் மகிழ்ச்சியுடன் சொன்னார். காரணம் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததுதானாம். வர்த்தகர்கள் எல்லாரும் இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைத்து உதவத் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

* * *

இந்திய பிரயாணத்தடைகள் இனி நீங்குமா? [illegible] ஓர் அன்பர் கேட்கிறார். சீக்கிரத்தில் இந்தத்தடைகள் நீங்கலாமென்றே தோன்றுகிறது.

* * *

புதிய அரசாங்கம் பதவி ஏற்றதும் என். கியூ. டயஸ் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறமனுச்செய்து கொண்டுவிட்டாராம்.

* * *

இலங்கை வானொலியில் சொன்ன விபரீதனாம், "போறவனே போறவனே என்னுடனாங்கம், புதிய சுகாரமே போறியா நீ சின்னாரங்கம்..." என்ற இசைத்தட்டு சங்கீதம் ஒலிக்கிறதாம்.

* * *

புலன் ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்து... டைம்மே லுக்கி, அலமந்த போதாக அஞ்சேலென்றருள் செய்வான் அமரர் கோவில், வலம்வந்து மடவார்கள் நடமாடமுழவதிர மகமழவெண்சங்கு சிச், சிலமந்த அலமந்து மடமேறி முகிழ் பார்க்கும் தருமபுரமாரே.

— அப்பர் சுவாமிகள்.

ஐயாறன் எழுதுவது

ஜி. ஜி. ஏன் மந்திரிப் பதவியை ஒப்பவில்லை! இதைப் பற்றித்தான் இப்போது ஊரெல்லாம் பேச்சு. சென்ற சனிக்கிழமை பகல் 11 மணி இருக்கும். 'லேட்டஸ்ட் செய்தி தெரியுமா?' என்று ஓர் அதிகாரி சொல்லிக் கொண்டே வெளியிலிருந்து தமது காரியாலயை அறைக்குள் நுழைந்தார். கிளாக்மார்களெல்லாம் ஆவலுடன் அவரைப் பார்த்தனர். 'ஜி. ஜி. மந்திரிப் பதவியை ஏற்கவில்லை, எந்த மந்திரிப் பதவியானாலும் தமக்கு வேண்டாம் என்று விட்டாராம், கைத்தொழில், கமத்தொழில் மந்திரிப்பதவிவேண்டுமென்று அவர் கேட்டதாக வெளியான வதந்திகளெல்லாம் வெறும் புருடாதானாம்" என்றார்.

வெள்ளிக்கிழமை காலைப் பத்திரிகைகளில் அவருக்கு கமகாரமந்திரிபதவி என்ற செய்தி வெளியாயிற்று ஆனால் சதி வழக்கில் அவர் இன்னும் வாதம் செய்யவேண்டி இருப்பதால் மந்திரி பதவியை ஏற்க அவர் இப்போது முன்வரவில்லை என்றும் பின்னர் அவர் மந்திரியாகக் கூடுமென்றும் ஒரு வதந்தி. 'அவருக்கு இப்போது ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேலும் வழக்கறிஞர் என்ற முறையில் வருமானம் கிடைக்கும். ஆனால் மந்திரி பதவி என்றால் மாதச்சம்பளம், விக்கறுறைவு, இனி பல அரசியல் வழக்குகள் வரக்காத்திருக்கின்றன. அதையெல்லாம் அவர் தியாகம் செய்துவிட்டு, மந்திரி பதவியை ஏன் ஏற்க வேண்டும்" என்றார் அந்த அதிகாரி!

இன்னுமோர் அன்பர் என்ன சொன்னார் தெரியுமா? சென்ற தேர்தல் பிரசாரத்தின் போது யாழ்ப்பாணத்திலே ஜி. ஜி. ஒரு கூட்டத்தில் பேசிய போது, திருச்செல்வத்தாரை வன்மையாகத் தாக்கிப்பேசிவிட்டதாயும், அதே திருச்செல்வம் சற்றுமுன் எதிர்பாராத முறையிலே அங்கம் வகிக்கும் மந்திரிசபையில் தானும் இருக்க விரும்பாமலே ஜி. ஜி. அப்பதவி தமக்கு வேண்டாமென்று விட்டார் என்றார்.

காரணம் எதுவாயினும் சரி, 17 மந்திரிகள் உள்ள சபையில் தமிழருக்கு ஜனவிகிதாசாரப்படி 4 அல்லது 5 மந்திரிப்பதவிகளாவது கிடைக்கவேண்டும். ஜி. ஜி யும் மந்திரியாக இருப்பின் தமிழருக்கு இரண்டுஸ்தானங்களாவது கிடைத்திருக்கும். ஜி. ஜி. மந்திரியாகாதது பலருக்கு ஏமாற்றம்.

* * *

சில அரசியல் ரகசியங்களைக் கேள்விப்பட்டேன். முதலில் ஸ்ரீலங்காகட்சியினரான் தமிழரசுக்கட்சியின் ஒத்துழைப்பை நாடினராம், தமிழரசார் கேட்ட நிபந்தனைகள் எல்லாம் அளிப்பதாக அவர்கள் ஒப்புக்கொண்டதாயும், ஆனால், டில்லி ஒப்பந்தத்திலே, விட்டுவரவேண்டிய 1 1/2 லட்சம் பேர்களுக்கும் இலங்கை பிரஜா உரிமையளிக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டதை ஸ்ரீலங்கா கட்சிக்காரர்கள் மறுத்துவிட்டனராம். அவர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேற்றுவதாக ஒப்புக்கொண்டதாயும், இவ்விஷயமாகவே பேச்சு முறிந்ததாயும் தெரிகிறது.

பின்னர்தான் ஐக்கியதேசியக் கட்சியினர் தமிழரசுக்கட்சியின் ஆதரவை நாடி வெற்றி பெற்றனராம்.

யு. என். பி. என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பெயரை, ஐனநாயக சோஷலிஸ்ட் கட்சி (டி. எஸ். பி) என்று சீக்கிரத்தில் மாற்ற இருப்பதாகக்கேள்விப்பட்டேன்,

திரு. தொண்டமான் இன்று திங்கட்கிழமை புதுடில்லிக்குப் பறந்துசெல்லுகிறார். ஒருவாரம்

(4-ம் கலம் பார்க்க)

வடவியட்னாமுக்கு எதிரான யுத்தம் தீவிரப்படுத்தப்படும்?

தென்வியட்னாமில் இராணுவச் சட்டம் நீக்கப்பட்டது

தேவையான இராணுவ உதவிகளைப் பெற ஜெனரல் டெயிலர் வாஷிங்டன் சென்றார்

சைகோன், மார்ச் 28

கடந்த வருடம் நவம்பர் மாதத்திலிருந்து தென்வியட்னாமில் அமுலிலிருந்த இராணுவச் சட்டத்தை முற்றாக நீக்குவதென்று தென்வியட்னாம் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தற்பொழுது அமுல் செய்யப்பட்டுவரும் ஊரடங்கு சட்டத்தின் நேரத்தையும் குறைப்தென்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

தென்வியட்னாமில் ஏற்பட்ட நெருக்கடிகளைத் தொடர்ந்து கடந்த வருடம் நவம்பர்மாதம் தென்வியட்னாமில் இராணுவச் சட்டம் அமுல் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்த நாட்டின் பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. தற்பொழுது நாட்டில் நெருக்கடிகள் குறைந்திருப்பதால் இராணுவச் சட்டம் விலக்கப்பட்டு ஊரடங்கு உத்தரவு அமுல் நேரமும் குறைக்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

ஜெனரல் டெயிலர் வாஷிங்டன் சென்றார்

தென்வியட்னாமில் அமெரிக்க தூதராகவிருக்கும் ஜெனரல் டெயிலர் இன்று வாஷிங்டன் வந்து சேர்ந்தார். தென்வியட்னாம் நிலைமை குறித்து அவர் அமெரிக்க அதிபர் திரு டின்டன் ஜோன்ஸனுடன் பேச்சுகள் நடத்துவார்.

வடக்கு வியட்னாமுக்கு எதிரான யுத்தத்தை தீவிரப்படுத்தும் பொருட்டு அமெரிக்க அதிபருடன் ஜெனரல் டெயிலர் இன்ற ஆலோசனை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

யுத்தத்தைத் தீவிரப்படுத்துவதற்கு தென்வியட்னாமுக்குத் தேவைப்படும் சில உதவிகளையும் கொண்ட பட்டியலை ஜெனரல் டெயிலர், அமெரிக்க அதிபரிடம் சமர்ப்பிப்பார் எனத் தெரியவருகிறது

தென்வியட்னாம் நிலைமை

வாஷிங்டனுக்குப் புறப்படுமுன்னர், ஜெனரல் டெயிலர் இங்கு பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெற்குவியட்னாமில் நிலைமை சீரடைந்துவிட்டதென்றும் வடக்குவியட்னாமுக்கு எதிரான யுத்தத்தைத் தீவிரப்படுத்துவதில் அந்நாட்டு மக்கள் முனைந்துள்ளனர் என்றும் கூறினார்.

கியூபா அறிவிப்பு

வடக்குவியட்னாமுக்கு இராணுவ உதவிகளை அளிக்க சீனா முன்வந்திருக்கிறது பலவிதமான இராணுவ உதவிகளை வழங்குமாம்.

சீனாவுக்கு வருமாறு ஷேக்குக்கு அழைப்பு

பீகிங், மார்ச் 28

சீனாவுக்கு விஜயம்செய்யுமாறு முன்னாள் காஷ்மீர் பிரதமர் திரு ஷேக் அப்துல்லாவுக்கு சீன அரசாங்கம் அழைப்பொன்றை விடுத்துள்ளது.

இந்த அழைப்பை சீன உதவிப் பிரதமர் மார்ஷல் சென்-யி, பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு புட்டோ மூலம் விடுத்திருக்கிறார்.

கெய்ரோன் கொலை: ஒருவர் கைது

புதுடில்லி, மார்ச் 28

கெய்ரோன் கொலைவழக்கில் பொலிஸாரினால் தேடப்பட்டுவந்த சுலாசிங்கை நேற்று பொலிஸ்கொஷ்டியினர் கைதுசெய்தனர். இவரைக் கைதுசெய்வதற்காக மூன்று இந்திய ராஜ்யங்களில் தேடுதல் வேலைகள் நடத்தப்பட்டன என்றும் இவரைப் பிடிப்பதற்காக பெரும் சிரமம் தங்களுக்கு ஏற்பட்டதாகவும் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அல்பேனியாவுக்கு சீன விஜயம்

பீகிங், மார்ச் 28

சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் இன்று அல்பேனியாவுக்கு உத்தியோகபூர்வமாக விஜயம்செய்தார்.

மரண தண்டனை ஆயுட் சிறையானது

சதிக்குற்றச்சாட்டில் பத்து பேருக்கு நிக்ருமா கருணை

ஆக்ரா, மார்ச் 28

கானு அரசாங்கத்தைக் கவிழ்க்க சதிசெய்த குற்றத்துக்காக முன்னாள் வெளிநாட்டு மந்திரி திரு அமோ அஜே உட்பட 10 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இத்தண்டனையை அதிபர் நிக்ருமா, ஆயுட்கால சிறைத்தண்டனையாக குறைத்துள்ளார்

திரு. அமோ அஜேக்கு கடந்த மாதம் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

பிரிட்டன் வரவேற்பு

புரட்சி சதிகுற்றத்துக்காக 10 பேருக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனையை அதிபர் நிக்ருமா ஆயுட் சிறைத் தண்டனையாக குறைத்தமை பிரிட்டன் வரவேற்றுள்ளது

மந்திரிகளின் இலாகாக்கள்

பண்டாரநாயக்கா, ஞாயிறு புதிதாக அமைக்கப்பட்ட மந்திரி சபையின் கீழ் இயக்கும் காரியாலயங்கள்:

பிரதமமந்திரியும் உள்நாட்டு வெளிநாட்டு மந்திரியும்

இராணுவம், தலைமைக் கட்டளைமையப்படை, பொலிஸ், குடியேற்ற வெளியேற்ற இலாகா, இந்தியன் பாகிஸ்தான் பிரதேசங்கள் விவகாரம்.

ராஜாங்க மந்திரி

தகவல் - ஒலிபரப்புஇலாகா அரசாங்க உலோச சபை, மிருகசாலை, வங்கி பரிபாலன இலாகா, அரசாங்க அச்சகம், ஆயப்பதிவேடுகள் இலாகா.

நிதி மந்திரி

திறைசேரி, அரசாங்க சேவை—ஆசிரியர்கள், கைம்பெண்களின் பென்சன், வருமானவரி இலாகா, சுங்க இலாகா-மதிப்பீடு, புள்ளிவிபர இலாகா - தேசிய சேமிப்பு வங்கி, கடன்சபை, இலங்கை சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, கமத்திற்காககடன் கொடுக்கும் கூட்டுஸ்தாபனம்.

காணி, நீர்பாசன மந்திரி

காணி இலாகா, காட்டுக் கந்தோர், மதிப்பீடு இலாகா, காணி அபிவிருத்தி இலாகா கல்லோயா அபிவிருத்திச்சபை, சுந்தரராய் சீனி கூட்டுஸ்தாபனம், மின்சார இலாகா.

உள்நாட்டு மந்திரி

கச்சேரிகள், பதிவுகந்தோர், கிராம அபிவிருத்தி இலாகாவும்-சிறு கைத்தொழில் பகுதியும் முஸ்லிம் கன்கொடை சபைகள்.

தேசியமய சேவைகள் மந்திரி

இ. போ. ச. இலங்கை பெற்றோலியம் கூட்டுஸ்தாபனம், துறைமுக இலாகாக்கள்.

கூலிதார மந்திரி

கூலிதார இலாகாவும் ஆயுள் வேதப்பகுதியும்.

வர்த்தக மந்திரி

வர்த்தகம்—நம்பெனிகள் பதிவுசெய்யும் இலாகா, இறக்குமதி-ஏற்றுமதி இலாகா, தேயிலை ஏற்றுமதி-தேயிலைக் கட்டுப்பாட்டு இலாகாக்கள், கப்பல் போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தியும் கூட்டுறவு சங்கங்கள் பதிவுசெய்யும் இலாகாவும்.

நீதிமந்திரி

சட்ட நகல் தயாரிக்கும் இலாகா, குடியுரிமைக்கோட்டு பதிவாளர் - அற்றோனி ஜெனரல், பிலைசால் இலாகா, மாவட்ட மஜிஸ்ரேட் கோடுகள் - கிராமக்கோடுகள் இலஞ்ச கமிஷன், மதியல் சாலை, அரசாங்க ரசாயனக் தேர் - உத்தியோக மொழி, பொதுசொத்து பாதுகாப்பு இலாகா.

உணவு விவசாய மந்திரி

கமத்தொழில் இலாகா, நெல் கட்டுப்பாட்டு இலாகா, உணவுகட்டுப்பாட்டு இலாகா, தெங்கு சீரமைப்பு இலாகா, விற்பனை இலாகா. வாணிப இலாகா.

ஸ்தலஸ்தாபன மந்திரி

ஸ்தலஸ்தாபனம், ஸ்தலஸ்தாபன சேவை நாட்டு- நகரத்திட்டம் செய்யும் இலாகா, தண்ணீர் விநியோகம், வடிகால் திட்டம் செய்யும் இலாகாவும்.

கல்வி, கலாச்சார மந்திரி

கல்வி, தொழிற் கல்வியும் பயிற்சிக் கல்வியும்-யு என். இ. எஸ். சி. ஏ. திறைசேரி இலங்கை கல்வி சேவைகள்-கல்வி சபை-தொழில் கல்வி சபை-தொழில் கல்வி பயிற்சி சபை-தேசிய காட்சியகம்-அரசினர் நுண்கலைக் கல்லூரி-கலாச்சாரப் பகுதி-பழம் பொருளாராய்ச்சி இலாகா.

தொழில் விடயைப்பு மந்திரி

தொழில் இலாகாவும் விடயைப்பு இலாகாவும்.

தபால் பொது மராமத்து மந்திரி

பொது மராமத்து இலாகாவும், தபால் பகுதி இலாகாவும்.

போக்குவரத்து மந்திரி

புகையிரதமோட்டார் பகுதி இலாகாக்கள்,

சமூகசேவைகள் மந்திரி

சமூக சேவை இலாகாவும், பிள்ளைகள் பராமரிப்பு இலாகாவும்.

மரணதண்டனை நிறைவேற்றம்

ரபாட், மார்ச், 28

மொரோக்கோ அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்த குற்றத்துக்காக 14 பேருக்கு விதிக்கப்பட்டிருந்த மரணதண்டனை நேற்று நிறைவேற்றப்பட்டது. அல்ஜீரியாவில் ஆயுத பயிற்சி பெற்று அவர்களின் உதவியுடன் மொரோக்கோ அரசாங்கத்தை கவிழ்க்க இவர்கள் சதிசெய்தனராம்.

இலங்கைக்கு புதிய ரஷ்ய தூதர்

மாஸ்கோ, மார்ச் 28

சோவியத்யூனியனின் இலங்கைத் தூதராக லியோனிட் கொரோபின் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. கொரோபின், 1951-ம் ஆண்டிலிருந்து சோவியத் வெளிநாட்டு அமைச்சில் கடமையாற்றிவருகின்றார்.

விண்வெளிபயணத்தில் 9 ரஷ்யர் மாண்டனர்?

இத்தாலியிலிருந்து வெளியான திடுக்கிடும் தகவல்

இத்தாலி, மார்ச் 26

சோவியத்ரஷ்யாவில் 1960ம் ஆண்டிலிருந்து விண்வெளிப் பயணத்தில் 9 பேர் உயிரிழந்திருக்கிறார்கள் என ரூரின் அருகே அமைந்துள்ள விண்வெளி பயண ஒலிபரப்பு நிலையமொன்றை நடத்தும் இரண்டு இத்தாலிய சகோதரர்களில் ஒருவரான லியானலி பாட்டிஸ்டா தெரிவித்தார்.

ரஷ்ய விண்வெளிப்பிரயாணிகள் 14 பேர் மாண்டதாக நிலான் நகர செய்திப் பத்திரிகை ஒன்றில் வெளியான அறிக்கை பற்றி திரு பாட்டிஸ்டா மேலும் கூறியதாவது:

"அது உண்மைதான். 14பேர் மாண்டதாக அமெரிக்கர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்களில் 9 பேர் மாண்டதை நாங்கள் பதிவு செய்திருக்கிறோம்."

மாண்ட 5 பேரின் பெயர்களை ரூரின் நகர பத்திரிகை வெளியிட்டுள்ளது.

1961 அக்டோபர் 4-ல் சோவடோவ்ஸ்கி, 1962 அக்டோபரில் லோபேவ்ஸ்கி, 1962 நவம்பரில் பெலொகோனவ், 1964 மே மாதத்தில் ஸ்கிபோடில் டோன்கரவ், மற்றும் பெயர் தெரியாத ஒரு பெண்.

பெலோகோனவ் தரையிலுள்ள நிலையத்துடன் கடைசியாக பேசும்போது, "நீங்கள் சொல்வது கேட்கவில்லை. கருவிகள் வேலைசெய்யவில்லை என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை" என்று கூறினாராகத் தெரிகிறது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் அதிகாரபூர்வமாக விண்வெளிக்குப்போன யூரிகாரின் பேசுகையில், ரஷ்ய விண்வெளிப் பயணிகள் இறந்த செய்தியை மறுத்தார். ஒவ்வொரு சோதனையும் வெற்றிகரமாக நடந்ததாகவும் அவர் கூறினார்.

நடுவழிக்கொள்கையை கண்டுபிடிக்கவேண்டும்

மொழிப்பிரச்னை குறித்து பிரதமர் சாஸ்திரி கருத்து

புதுடில்லி, மார்ச் 28

மொழிப்பிரச்னை தீர நடுவழிக் கொள்கையொன்றை நாம் கண்டுபிடிக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

ஹிந்தி பேசாத ராஜ்யங்களில் ஹிந்திமொழி எந்தவிதத்திலும் திணிக்கப்படமாட்டாது என்று கூறிய திரு சாஸ்திரி; ஹிந்தி பேசாத மக்கள் ஹிந்தி மொழியில் தேர்ச்சிபெறும் வரை எந்தவித திணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படமாட்டாது என்றும் தெரிவித்தார்.

"தமிழ் நாட்டிலுள்ள மக்களில் சிலர், ஆங்கிலம் தொடர்ந்திருக்க வேண்டும் என விரும்புகிறார்கள். சிலர், நேருஜியின் உறுதிமொழிகள் சட்டமாக்கப்படவேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் அம்மக்கள் விரும்பாதவரை ஹிந்தி அங்கு திணிக்கப்படமாட்டாது" என்றும் பிரதமர் சாஸ்திரி கூறினார்.

மழை விட்டும் தூவானம் ஓயவில்லை

உடுப்பிட்டி, ஞாயிறு

தேர்தல் சாதகமாக உடுப்பிட்டித்தொகுதியில் இருவர் மோதியடிக்கொள்ளுகிறார்கள். ஒருவர் அரை மீசை வைத்திருக்கிறார். இன்னும் சிலர் தமது தாடிகளையும், மீசைகளையும் எடுத்துவிட்டனர். தேர்தல் முடிந்த பிறகும் சில இடங்களில் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே கருத்துமோதல்களும், கைகலப்புகளும் நடைபெற்றுள்ளன. கெவிளியடியில் கட்சிவேறுபாடுள்ள இரு வீடுகளில் போட்டிக்கு மறுநாள் ஒருவன் முழுவதும் பலருடைய கள் பெறுமதியான வெடிகள் கொழுத்தி காசம் செய்யப்பட்டன.

விமான விபத்து

கராச்சி, மார்ச் 28

பாகிஸ்தான் சர்வதேச எர்லைன் விமானமொன்று பாகிஸ்தான் வடமேற்கே விபத்துக்குள்ளானதில் 22 பேர் மாண்டனர்.

புதிதாக வரவழைக்கப்பட்டுள்ள "பேக்கின்க்" அமைப்பு மோட்டார் பருத்தித்துறை கப்பர் மடம் கடற்கரையில் பரீட்சார்த்தமாக இயக்கிக் காட்டப்பட்டபோது எடுத்தபடம்.



உண்மையான ஜேர்மனிய சுவை அனுபவிக்க

திறீ கொயினஸ்

இந்த லாகர் அதி உன்னத பானம் தனக்கென ஒரு சுவையும், பொன்னிறமும் வெண்ணுரையும் கொண்டது.
திறீ கோயினஸ் லாகர் ஜேர்மன் வல்லுனர்களால் சிறந்த பண்டங்களில் இருந்து ஆசியாவிலேயே அதி நவீன ஆலையில் தயாரிக்கப்பட்டது.
திறீ கோயினஸ் லாகரை வாங்கி ஒரு தரம் உன்னத பானத்தை பெற்றவராவீர்.

மெக்கலம் புறூவெறீஸ் (சிலோன்) லிமிடெட்
விநியோகஸ்தாகள்:
ஷாவலாஸ் அன் கெட்ஜஸ் லிமிறட்,
கொழும்பு-3.

WT MB6

ஸ்ரீராமகிருஷ்ணரின் போதனைகள் வாழ்க்கைக்கு வழிகாட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

"இந்து சமயத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் ஆற்றியுள்ள பணிகள் எவராலும் மறக்கமுடியாது. அவருடைய போதனைகளும் சாதனைகளும் இக்காலத்தவருக்கு நல்வழி காட்டக் கூடியனவாகவுள்ளன" என்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் வண்ணை வைத்தீஸ்வரர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் ஜயந்தி விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ச. அம்பிகைபாகன் தொடர்ந்து பேசியதாவது:

ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் பாடசாலை பரிபாலனம் ஏனைய பாடசாலை முகாமையாளருக்கு முன்மாதிரியாக இருந்தது. ஸ்ரீராமகிருஷ்ண மிஷனால் உருவாக்கப்பட்ட வைத்தீஸ்வர வித்தியாலயம் அரசாங்கத்தினால் கையேற்கப்பட்டுவிட்ட போதிலும் தனது கடமையைச் செய்யவேண்டியிருக்கின்றது. நாம் வாழ்வதற்காகவே இறைவனை வழிபடுகின்றோம். பெரியார்களுக்கு அஞ்சலி செய்கின்றோம்.

ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்சர் சிறந்த முறையில் நமக்கு வழி காட்டியிருக்கின்றார். அவருடைய போதனைகள் சமயத்துவத்திற்கு எதிரானவர்களுடைய கருத்துக்களுக்கு பதில் சொல்லக்கூடியன.

ஸ்ரீமத்சுவாமி ரங்கானந்தா 'பரமஹம்சரின் வாழ்க்கையும் உபதேசமும்' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

பரமஹம்சரின் பக்திசிரத்தை தான் அவருடைய உயர்ந்த நிலைக்குக்காரணமாயமைந்தது. அவர் பூசகராக இருந்தபோதும் மற்றவர்கள் பூசகராக இருந்ததற்கும் நிரம்பிய வேறுபாடு உண்டு. எல்லோரும் இதனைத் தமது கடமை என்று கருதினர். ஆனால் பரமஹம்சர் இதனை தமது ஆத்மீகத் தொண்டு என எண்ணினார். உலகம் உய்ய சமயத்தின் சிறந்த தத்துவங்களை எம்மாம் அழகான போதனைகளில் வெளிப்படுத்தியிருக்கின்றார். அவருடைய போதனைகளை இன்றைய உலகம் பின்பற்றினால் அமைதியும் சாந்தியும் ஏற்படும்.

இராமநாதன் அக்கடமி மாணவிகளின் இன்னிசை நிகழ்ச்சியும் விழாவில் இடம் பெற்றது.

"பட்டம் பதவி தேவையில்லை"

உடுப்பிட்டி, ஞாயிறு

"எனது வெற்றி வாலிபர்களுடைய மகத்தான வெற்றி. எந்த ஒரு அரசியல் வாதிகளும் வாலிபர்களுடைய ஒத்துழைப்பு மிகவசியமானதை உடுப்பிட்டித் தொகுதி வாலிபர்கள் நிரூபித்துவிட்டார்கள். தமிழினத்தின் உரிமைகளைப் பறிகொடுக்கும் எந்தநடவடிக்கைகளையும் நான் ஏற்றுமாட்டேன். உரிமையைப் பறிகொடுத்துப் பட்டம் பதவிகளுக்கு ஆசைப்படுபவனும் நானல்ல" என்று உடுப்பிட்டித் தொகுதி தமிழ்க் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் திரு மு. சிவசிதம்பரம் தமது வெற்றி உறுதி கரவெட்டி மேற்கில் உடுப்பிட்டித்தொகுதி வாலிபர் முன்னணியினர் அழைத்து நடாத்திய தேநீர் விருந்தின்போது பேசுகையில் கூறினார்.

திருவாளர்கள் செ. கனகரத்தினம், ஸ்ரீஸ்கந்தராசா, தவராசா ஆகியோருட்பட பலர் பேசினர்.

பாட்மின்ரன் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாடசாலைகளுக்கிடையில் நேற்று வை; எம். சி. ஏ. மைதானத்தில் நடைபெற்ற 'பாடமின்ரன்' போட்டியில் சாம்பியனாக ஸ்கந்தா 'ஏ' பிரிவும் பெண்களில் சாம்பியனாக கண்டிக்குளி கோஷ்டியும் தெரிவுசெய்யப்பட்டன.

இரண்டாவது இடத்தை ஆண்களில் ஸ்கந்தா 'பி' பிரிவும், பெண்களில் வேம்படி கோஷ்டியும் பெற்றன.

6 பேர் பலி

ஜாகர்த்தா, மார்ச் 28

மேற்கு ஜாவாவில் இராணுவ கிடங்கு ஒன்று தீப்பற்றிக்கொண்டதால் 6 பேர் மாண்டனர். ஏழு பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தில் சதி நடவடிக்கை எதுவும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருட்களின்

விலைகள் குறைகின்றன

பம்பலப்பிட்டி, ஞாயிறு

பொதுத்தேர்தல் நடந்து ஐந்து நாட்களுக்குப் பின்னர் பல பொருட்களின் விலைகள் குறைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட பிளேட் தற்பொழுது 12 சதமாக விற்கப்படுகிறது. முன்னர் பிளேட்டுகள் 40 சதமாக விற்கப்பட்டதாம். தீப்பெட்டிகளினதும், பழையகாட் சாறங்களின் விலை ஆகியன குறைந்துள்ளதாம். பிள்ளைகளின் பால் உணவுகளும் விலைகுறைந்துள்ளது என்றும் தெரியவருகிறது.

சென். ஜோன்ஸ் கல்லூரி 8 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது

101வது ஓட்டத்தில் முதல் விக்கட்டை இழந்தது

கடந்தகால புள்ளி விபரங்கள் தரும் தகவல்கள்

யாழ்ப்பாணம், திங்

யாழ்ப்பாணம் கிரிக்கெட் ரசிகர்களின் கவனத்தை பெரிதும் கவர்ந்துவந்த யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ்—மத்திய கல்லூரி கிரிக்கெட் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்று முடிவடைந்தது. இந்தப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி எட்டு விக்கட்டுகளாலும் ஒரு ஓட்டத்தாலும் வெற்றியீட்டியுள்ளது

ஸ்கோர் விபரம்

மத்தியகல்லூரி—முதல் இன்னிங்ஸ்: வி. கங்காதரன்-02, டி. இந்திரகுமார்-29, எம். ஸ்ரீபத்மநாதன்-09, ஏ. பற்குணராஜா-26, கே. டி. கணேஷ்குமார்-07, ஆர். சச்சிதானந்தம்-29, ஆர். மனோகரன்-01 வி. அம்பலவாணர்-16, ரி. நடராஜா-04, கே. சண்முகலிங்கம்-32, எஸ். சிவசோதி (ஆட்டமிழக்கவில்லை)-04

மொத்தம் (மேலதிக ஓட்டங்கள் உட்பட) 171.

இரண்டாம் இன்னிங்ஸ்:

டி. இந்திரகுமார்- 17, எம். ஸ்ரீபத்மநாதன்- 08, கே. டி. கணேஷ்குமார்- 03, ஏ. பற்குணராஜா- 88, ஆர். சச்சிதானந்தன்- (ஆட்டமிழக்கவில்லை) 80, ஆர். மனோகரன்-07, வி. அம்பலவாணர்- 00, ரி. நடராஜா- 11, கே. சண்முகலிங்கம்- 07, எஸ். சிவசோதி-01, வி. கங்காதரன்-00

மொத்தம் (மேலதிக ஓட்டங்கள் உட்பட) 184.

சென்ஜோன்ஸ் கல்லூரி முதலாவது இன்னிங்ஸ்):

வி. சூரியகுமார்- 83, எஸ். எஸ். ஜெயநாயகம்- 47, சுலேந்திரா- 13, எம். தெய்வேந்திரா- 17, எஸ். எம். முத்தகம்பி- 01, பி. கனகதுரை-28, ஜே. லைரவப்பிள்ளை- 15, ரி. விபுலானந்தா- 09, எஸ். சிவக்குமார்- 02, கியு. ரத்னம்- 06

மொத்தம் மேலதிக ஓட்டங்கள் உட்பட) 237.

இரண்டாம் இன்னிங்ஸ்:

வி. சூரியகுமார்- 03, எஸ். எஸ். ஜெயநாயகம் 04, எம். தெய்வேந்திரா (ஆட்டமிழக்கவில்லை)- 31, ரி. விபுலானந்தா ஆட்டமிழக்கவில்லை)-18,

மொத்தம் 2 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 69 ஓட்டங்கள்

மத்தியகல்லூரி

மத்தியகல்லூரிதான் முதலில் ஆடத்தொடங்கியது. சென் ஜோன்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் மத்தியகல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 171 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது அவ்வளவு வரவேற்கத்தக்கதாக இருக்கவில்லை. முதலாவது இன்னிங்ஸில், கே. சண்முகலிங்கம் 32 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இவர் மட்டுமே இக்கோஷ்டியில் முதல் இன்னிங்ஸில் ஆகக் கூடுதலான ஓட்டங்கள் பெற்றிருந்தார். இரண்டாவது இன்னிங்ஸில், ஆர். சச்சிதானந்தம் 39 ஓட்டங்கள் பெற்றிருந்தார்.

குறிப்பாகச் சொல்லப் போனால் துடுப்பெடுத்தாடுவதைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி இம்முறை சோபிக்கவில்லை என்றுதான் சொல்லலாம்.

பந்து வீசுவதைப் பற்றி சொல்லவேண்டுமானால், குறிப்பாக பற்குணராஜாவையும், சிவஜோதியையும் பாராட்டலாம்.

சென். ஜோன்ஸ்

சென்: ஜோன்ஸ் கல்லூரி இம்முறை தனது திறமையை ஓரளவு காட்டியிருக்கிறது.

சூரியகுமாரின் திறமை

சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த வி. சூரியகுமார் 83 ஓட்டங்கள் எடுத்திருந்தது உண்மையிலேயே பாராட்டக்கூடியதொன்றாகும். அடுத்ததாக எஸ். எஸ். ஜெயநாயகம் 47 ஓட்டங்கள் பெற்றிருந்தார்.

இரண்டாம் இன்னிங்ஸில் எம். தெய்வேந்திரா ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்கள் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

பந்து வீசுவதில்; எம். தெய்வேந்திரா, வி. சூரியகுமார் ஆகிய இருவரும் சிறந்து விளங்கினார்கள். எம். தெய்வேந்திரா, நாற்பத்தியொரு ஓட்டங்கள் கொடுத்து நான்கு விக்கட்டுகளை கைப்பற்றியிருந்தார். வி சூரியகுமார் 32 ஓட்டங்கள் கொடுத்து இரண்டு விக்கட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

ஒரு சாதனை

சென். ஜோன்ஸ் கல்லூரி இம்முறை ஒரு சாதனையை நிலைநாட்டியிருக்கிறது. சென். ஜோன்ஸ் கல்லூரி 100 ஓட்டங்கள் பெறும்வரை ஒரு விக்கட்டையும் இழக்கவில்லை. ஒரு விக்கட்டும் நஷ்டமின்றி 100 ஓட்டங்களை எடுத்த சென். ஜோன்ஸ் கல்லூரி 101-வது ஓட்டத்தில்தான் தனது முதலாவது விக்கட்டை பறிகொடுத்தது

கடந்த இரு வருடங்களையும் கோக்கு விடுதது 1963-ம் ஆண்டில் சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எம். தெய்வேந்திரா 22 ஓட்டங்கள் கொடுத்து 4 விக்கட்டுகளைக் கைப்பற்றியிருந்தார். மத்திய கல்லூரியைச் சேர்ந்த சி. ராஜதுரை கடந்த வருடத்தில் 51 ஓட்டங்கள் கொடுத்து ஐந்து விக்கட்டுகளை வீழ்த்தியிருக்கிறார்.

1901 முதல் 1963 வரை.....

1961-ம் ஆண்டு முதல் இந்த ஆண்டு (1963) வரை யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே எத்தனையோ கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றிருக்கின்றன, இத்தனை போட்டிகளிலும் ஓரளவு கணக்கிட்டுப்பார்த்தால் சென் ஜோன்ஸ் கல்லூரி தான் அதிகமான போட்டிகளில் வெற்றியீட்டியிருக்கின்றது. எமக்குக்கிடைத்த தகவலின்படி மொத்தமாக 38 போட்டிகளில் சென் ஜோன்ஸ் கல்லூரியும் 18 போட்டிகளில் மத்திய கல்லூரியும் வெற்றிவாகை சூடியிருக்கின்றன. 12 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருக்கின்றன. சில வருடங்களில் விளையாட்டு நடைபெறவில்லை

கடந்த வருடத்தில் மூன்று விடுதுகளை (சிறந்த பந்து வீச்சுக்காரர்; சிறந்த "பீல்டர்" சிறந்த வீரர்) மத்திய கல்லூரி பெற்றிருந்தது. சிறந்த துடுப்பு வீரராக சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்தவர் தெரிவு செய்யப்பட்டு விருது பெற்றார். இந்த வருடத்தில்; சிறந்த வீரருக்குரிய பரிசுமட்டும் மத்திய கல்லூரிக்கு கிடைத்திருக்க மற்றைய மூன்று பரிசுகளையும் சென். ஜோன்ஸ் பெற்றிருக்கிறது.

சென். ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணத்தில் கலைட்டியாக 1959-ம் ஆண்டில் அது வெற்றியீட்டியிருக்கிறது. 1960-ம் ஆண்டில் மத்திய கல்லூரி சென்றிருக்கிறது. 1961-ம் ஆண்டில் விளையாட்டு நடைபெறவில்லை. 1962, 1963, 64-ம் ஆண்டுகளில் நடைபெற்ற போட்டிகளில் எக்கல்லூரியும் தெற்றிபெறவில்லை. பொதுவாக இந்தப்பள்ளி விபரங்களைப் பார்க்கையிலே சென். ஜோன்ஸ் கல்லூரியே ஓரளவு சிறந்து விளங்கியிருக்கிறது.

இப்போட்டியில் மத்தியஸ்தர்களாக திரு இரத்தினசாயகரும் திரு. ஏ. சண்முகநாதனும் கடமையாற்றினார்கள். பிரதம அதிபர்களாக மத்திய கல்லூரி அதிபர் திரு. ஈ. சபாலிங்கமும் அவரது பாரியாரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி 30ஓட்டங்களால்வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் பலவருடங்களாக நடைபெற்றவருகின்ற கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி சென்றபற்றிக்ஸ் கல்லூரியை 30 ஓட்டங்களால் தோற்கடித்தது. இப்போட்டி சென்றபற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணக்கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி ஆக 82 ஓட்டங்கள் மட்டுமேஎடுக்க முடிந்தது. ஜேக்கப் என்பவர் மாத்திரம் திறமையாக விளையாடி 25 ஓட்டங்கள் எடுத்தார். பெனடிக் என்பவர் 18 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கட்டுகளையும், ஜெயரத்தினம் 19 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

சென்றபற்றிக்ஸ் கல்லூரி தமது முதல் ஆட்டத்தை ஆடத் தொடங்கியதும் 8 விக்கட்டுகளை இழந்து 50 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார்கள். ஆனால் பின்துடுப்பெடுத்தாடவந்த வர்ணகுலசிங்கி என்பவர் பொறுமையாக விளையாடியதால் 126 ஓட்டங்கள் எடுக்க முடிந்தது. வர்ணகுலசிங்கி ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்கள் எடுத்தார். ஞானச்சந்திரன் 40 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

யாழ்கல்லூரி இரண்டாவது ஆட்டத்தில் 156 ஓட்டங்கள் எடுத்தது. மேதர், ஜேக்கப் முறையே 35, 29 ஓட்டங்களை எடுத்தார்கள். அன்ரன் 45 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

சென்றபற்றிக்ஸ் கல்லூரி இரண்டாவது ஆட்டத்தில் 82 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சேதுபதி, சண்முகா முறையே 4, 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்கள். யாழ்கல்லூரி சென்றபற்றிக்ஸ் கல்லூரியை 30 ஓட்டங்களால் தோற்கடித்தது.

REGAL — JAFFNA
NOW SHOWING
Beauties of Night World!
SEXY FOLLIES
(Totalscope - Eastmancolor)
(ADULTS ONLY)

கெப்பிட்டல் (கொட்டாஞ்சேனை)
பினாஸா (வெள்ளவத்தை)
விஜிதா (ஹட்டன்)
தீவொலி (நுவரேலியா)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்
எஸ். எஸ். ராஜேந்திரன்
பானுமதி — பத்மினி
(மற்றும் பலர் நடித்த)
ராஜா
தேசிங்கு

தைத்தறி சேலைகள்

80, 100, 120-ம் நம்பர் நூல்களில் எமது சொந்தத் தறிகளால் தேர்ச்சி பெற்றவர்களைக்கொண்டு டிசைன்கள் போட்டு தயார் செய்த சேலைகள் மலிவான விலைகளில் விற்பனைக்கிருக்கின்றன.

எஸ். ஆர். செல்லத்துரை
216, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 296

கேள்வி விளம்பரம்

ஊர்காவற்றுறை பட்டின சபை

ஊர்காவற்றுறைப் பட்டின சபையால் 1965-ம் ஆண்டு சித்திரை மாதம் 7-ந் திகதி புதன் கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பின்வரும் வேலைக்குக் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

1 ஆபீஸ் மேசையும், கதிரையும் செய்துதர.

மற்றும் விபரங்கள் ஊர்காவற்றுறை பட்டினசபைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்,

வே. சிவசம்பு,
தலைவர், பட்டினசபை,
ஊர்காவற்றுறை.

25-3-65. 1902

கேள்வி விளம்பரம்

தேவை

அலுமினியப் பாத்திரவேலை செய்யக்கூடிய ஸ்பின்னரும், தகடுவிடிக்கூடியவரும் தேவை, எவர்சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1830

எமது ஸ்தாபனத்தில் தற்வேலை செய்ய நன்கு தெரிந்த பெண்மணிகள் உடன் தேவை. தங்குபவர்களுக்கு போஜன வசதிகளும் உண்டு.

அன்னம்ஸ் சாறி வேக்ஸ் 27, பவர்ஹவுஸ்ரோட், விக்னேஸ்வரா மேல்மாடி, யாழ்ப்பாணம். 1835

இலங்கைப் பிரஜா உரிமையுள்ள அல்லது விசா உள்ள ஏக்கௌன்டன் (இந்தியர்) தேவை, சம்பளம் ரூ. 150/- மேலும் விபரங்களுக்கு நேரில் விண்ணப்பிக்கவும்: யப்பான் ஊல்லர்ஸ், 164, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம் 1829

டாக்காவில் சென்-யி

டாக்கா, மார்ச் 28

சீன உதவிப் பிரதமர் மார்ஷல் சென்-யி நாளை இங்கு விஜயம் செய்வார். அவர் ஒரு நாள் தங்கியிருப்பார்.

ராதா குரு தைலம்

240,வியாதிகளுக்கு மகா சஞ்சீவி தலையிடி, ஜலதோஷம், கபாலஇடி வயிற்றுவலி, பல்வலி, விஷக்கடி சிரமல், நெஞ்சுச்சளி, வாதம் வலிப்பு, ஜன்னி, வாய்வுப்பிடிப்புகள் முதலிய சகல வியாதிகளுக்கும் சிறந்தது.

சுப்பிரமணியம் அன் கோ
53, கே. கே. எஸ். ரோட்,
(போன்:541) யாழ்ப்பாணம்.

தமிழரசாரின் ஒப்பந்த . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவாளர்கள் எம். திருச்செல்வம், அசோகா கருணாரத்தினா, வி. ஏ. கந்தநாதா, எம். எச். முகம்மது, ஈ. எல். பி. குருல ஆகியோர் இப்பொழுதுதான் மந்திரிப் பதவி ஏற்றுள்ளனர். ஆனாலும் அறிவும் ஆற்றலுமுள்ளவர்கள்.

மந்திரிசபையில் வேறு சிலரும் விரைவில் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியை மட்டுமே அரசாங்கம் எப்படித் தீர்க்கப்போகிறது என்பதை நாட்டு மக்கள் மட்டுமல்ல வெளிநாடுகளும் எதிர்பார்க்கின்றன.

தொழில் தகராறுகளை வருமாறு 31 கோரிக்கைகளை மீண்டும் முன்வைக்கும்! தமிழரசும் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதால் இடதுசாரிகளின் புதிய அரசாங்கத்தின்மீது "முதலாளித்துவ" குற்றச்சாட்டைத் தவிர வேறு குற்றச் சாட்டுக்கள் கமத்துவதற்கு இடமில்லை.

சென்ற ஒன்பது வருடகாலமாக நாடு சென்ற திசையை திடீரென எப்படி மாற்றுவது? சிரமம். பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

∴ ∴ ∴

தமிழரசாரின் ஒப்பந்தம்

தமிழரசுக்கட்சிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் என்னா? இதுவரை வெளியாகவில்லை. ராவிமெண்ட் கூடியதும் இதுபற்றிய கேள்விகள் எதிர்க்கட்சியிலிருந்து கிளம்பலாம்! பண்டா-செல்வா ஒப்பந்தம் வெளிவந்ததால் ஏற்பட்ட விளைவு! அதன் முடிவு! இந்த அனுபவங்கள் தான் ஒப்பந்தத்தைப்பற்றிய விபரங்கள் அந்தரங்கமாக இருப்பதற்குக் காரணம். பத்திரிகைகளின் ஆதரவு இந்த அரசாங்கத்திற்கு இருப்பதால் இவைபற்றி எதுவும் வெளிவராமலிருக்கின்றன. இல்லையேல் இதுவரை எத்தனையோ 'சரடு'கள் திரிக்கப்பட்டிருக்கும். எல்லாம் நன்மைக்கே! சிம்மாசனப் பிரசங்கம் என்ன சொல்லும்

ஹாக்கி போட்டி

யாழ்ப்பாணம், திங்கள் கடந்த விளையாட்டி முடிவு யாழ்ப்பாண கோட்டை மைதானத்தில் யாழ்ப்பாண ஹாக்கி சங்கத்தாரால் நடாத்தப்பட்ட சற்றுப்போட்டியில் கோப்பாய், கொழும்பு கல்லூரியை 4—0 கோல்களால் தோற்கடித்தது. இடைவேளையின்போது 3—0.

இடைவேளையின் பின்பும் இரண்டு கோல்கள் போட்டார்கள். தங்கராசா, குலேந்திரன் கோப்பாயின் சார்பிலும் லோகநாதரம் மகாஜனவின் சார்பிலும் நன்கு விளையாடினார்கள். (மத்தியஸ்தர்கள் பூபாலசிங்கம், ஜோர்ஜ் மாஸ்.)

இப்போட்டியின் இறுதி விளையாட்டு கடற்படையினருக்கும் கோப்பாயினருக்கும் கோட்டை மைதானத்தில் நடைபெறுமெனத் தெரிகிறது.

கிரிக்கெட்

யாழ்ப்பாணம், திங்கள் வெள்ளி, சனிக் கிழமைகளில் கொழும்பு ரோயல்கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் செண்ட்ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் சிநேகிதபூர்வமான கிரிக்கெட் விளையாட்டு கண்டிக்குளியில் நடைபெறும்.

புதிய பத்திரிகை சட்டம்

ஜாகர்த்தா, மார்ச் 28

இந்தோனேஷியாவில்நேற்று புதிய பத்திரிகைச் சட்டமொன்று அமுல் செய்யப்பட்டது.

இந்தோனேஷியாவிலுள்ள சகல [illegible] பத்திரிகைகளும் [illegible]யிலாகும் இந்தோனேஷியர்களுக்கே சொந்தமானதாக இருக்கவேண்டும் என்றும் இப்பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் குறைந்தது மூன்று அரசியல் கட்சிகளின் ஆத, கவப் பெற்றிருப்பதுடன் குறிப்பிட்டதொரு செய்தி [illegible]னத்தில் பதிவுப்பட்டிருக்க வேண்டும் என்றும் அச்சட்டம் கூறுகின்றது.

"உரிமை . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ள இடமளிக்கும்.

பட்டிருப்பு எம். பி. திரு எஸ். எம். இராசமாணிக்கம் பேசியதாவது:

தென்னிலங்கையிலுள்ள இரு பெரிய சிங்கள அரசியல் கட்சிகள் எமது ஆதரவை நாடின. எமது இனத்தின் உரிமைகளைத் தர முன்வருவோருக்கு ஆதரவு அளிப்போம் என்று முன்பே கூறியிருக்கின்றோம். இலங்கையிலுள்ள சிங்களத் தலைவர்கள் இலங்கைவாழ் தமிழ்பேசும்மக்களின் ஒத்துழைப்பு இன்றி இந்நாட்டின் அரசியலை நடத்த முடியாது என்பதையும் அவர்களது கோரிக்கைகள் நியாயமானது என்பதையும் உணர்ந்திருக்கிறார்கள். நாம் பதினாறுபேரும் மந்திரிப்பதவியை ஏற்க மறுத்துவிட்டோம், மந்திரிப் பதவி எமக்குப் பெரிதல்ல, எமது கட்சிப் பிரமுகர்களில் ஒருவரான திரு. எம். திருச்செல்வம் மந்திரியாகக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளோம். குடியேற்றத்திட்டங்கள், அரசாங்க ஊழியர்கள், மொழி சம்பந்தமான உடன்யோகம் எல்லாவற்றுக்கும் மேலாக பிரதேசசபைகளின் உதயம் என்பன நன்கு கவனிக்கப்படும். ஐக்கியதேசியக்கட்சி—தமிழரசுக்கட்சி ஒப்பந்தம் அமுல் நடத்தும் விஷயத்தில் நாம் மிகவும் விழிப்புடன் இருப்போம்.

மற்றும் பலரும் பேசினர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

'கந்தபுராணம் அறத்தை உணர்த்துகின்றது'

யாழ்ப்பாணம், திங்கள்

"கந்தபுராணம் பக்திமான்களுக்கு மாத்திரமல்ல, போர இடத்திற்குப் புண்ணியம் தேடுவோம் என்று எண்ணும் முதியமர்களுக்கு மாத்திரமல்ல இளைஞர்களுக்கும் சமூகவாதிகளுக்கும் குறிப்பாக அரசியலில் ஈடுபட்டிருக்கும் அத்தனை பேரும் பல பாடங்களைத் தரும புராணமாகும் அதர்மம் நிலைக்காது, அறமே என்றும் வாழும் என்ற உண்மையைத் தெட்டத் தெட்டத்தெளிவாகக் காட்டுவது கந்தபுராணமாகும்" என திரு. மு. சிவானந்தம் சித்தங்கேணி பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற சமய பிரசாரக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்து பேசையில் கூறியதாவது,-

"தேர்தல் கூட்டமென்றால், உரிமையுணர்ச்சியுள்ள மக்கள் பலர் உணர்ச்சிவசப்பட்டு ஏராளமாக ஒன்று கூடுவர். கேள்விகளினை புராண விளக்கம் என்றால் கோவில் தூண்களோடு தூண்களாக ஒரு சிலரே காணப்படுவர். பழைய முறையிலேயே புராணப்படிப்பு இருப்பதால் கவர்ச்சியில்லை எனவே மக்கள் திரளுவதில்லை. காலத்திற்கேற்றபடி கவர்ச்சியான முறையிலே புராணவிளக்கங்களுக்கு ஏற்பாடு செய்தல் அவசியம்.

நீதிநூல்களையும், தர்மவிளக்கம் தரும் கதைகளையும் மக்கள் மறந்துகொண்டுபோனால் நாட்டிலே அதர்மம் ஓங்கும் நல்ல சிந்தனையை பிஞ்சுள்ளங்களிலே பாய்ச்சத் தவறுவோமேயானால், குழப்பங்களும், ஒற்றுமையின்மையும் மலிந்து நாடு காடாகிவிடும், எனவே தான் சூரபத்மன்கள் எவ்வளவுதான் பெருவீரர்களாக இருந்தபோதிலும் அகங்காரத்தால் அழிந்து போவார்கள் என்ற உண்மையை விளக்கும் கந்தபுராணத்தை ஊர்தோறும் பரப்பவேண்டும்.

சன சமூக நிலைய கோரிக்கை

கழிபுரம், ஞாயிறு

சங்கானை தொட்டிலடி சன சமூக சேவா சங்க கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு சங்கத் தலைவர் திரு. க. அம்பலவாணர் தலைமைவகித்தார்.

சங்கானை பட்டின சபை எல்லைக்குள் துவிச்சக்கர வண்டியில் இருவர் பிரயாணம் செய்வதற்கு அனுமதிவழங்கவேண்டுமென சங்கானை பட்டினசபை மூலம் பொலிஸ் அதிகாரியைக் கேட்டுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கீரிமலை — சண்டிலிப்பாய் — யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் யாழ்ப்பாணம் ஆகிய பாதைகளுக்கு குறைந்தபட்சம் ஒரு மணி நேரத்துக்கு ஒரு பஸ் வண்டியாவது நல்ல முறையில் ஓடவிடவேண்டுமென சங்கானை பட்டின சபை மூலம் இலங்கை போக்குவரத்துச்சபை யாழ்ப்பாணம் மேற்கு டிப்போ முகாமையாளரை கேட்டுக்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

புதுச்சேரியில் தமிழ் ஆட்சிமொழி

புதுடில்லி, மார்ச் 28

புதுச்சேரியில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கோரும் தீர்மானம் புதுச்சேரி சட்டசபையில் ஏற்று ஏகமனதாக நிறைவேறியது.

கொள்கைகளை எதிர்த்தவர் மரணம்

வாஷிங்டன், மார்ச் 28

வியட்னாமுக்கான அமெரிக்க கொள்கைகளைக் கண்டித்து தனக்குத்தானே தீ மூட்டிய 83 வயதுள்ள [illegible] இந்துள்ள [illegible] மரணம் [illegible].

எம். ஜே. விக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம் நேற்றுக் காலை புகையிரத நிலையத்தில் தெல்லிப்பளையில் வந்திறங்கினார். தமது தொகுதிக்கு விஜயம் செய்த அவருக்குப் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

தெல்லிப்பளை புகையிரதநிலையத்திலிருந்து அவரது இல்லம் வரை திரு. செல்வநாயகம் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார். பின்னர் அவர் தமது தொகுதி ஆதரவாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

மாஜி எம். பி. நன்றி

யாழ்ப்பாணம், திங்கள்

"கடந்த ஐந்து வருடங்களாகத் தமிழ் பேசும் மக்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்யக் கூடிய வாய்ப்பை யாழ்ப்பாண மக்கள் எனக்களித்தார்கள். அவர்களுக்கு என்றும் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன்" என்று யாழ்ப்பாணம் முன்னாள் எம். பி. திரு. அல்பிரட் ஏ. டி. துரையப்பா விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தமது அறிக்கையில், தொடர்ந்தும் யாழ்ப்பாண மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் கூடுமானவரை உதவிகளைச் செய்வேன் என்றும் தெரிவித்துள்ளார்.

'இராவணேசன்' நாடகம்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுத்தலைவர் திரு. க. வித்தியானந்தன் தயாரித்துள்ள 'இராவணேசன்' என்னும் வடமோடி முறையில் ஆடப்பெறும் நாடகம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மேடையேற்றபட விருக்கின்றது. பேராதனை பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தினர் நடிக்கும் இந்த நாடகம் 30-ம் திகதி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும், 31-ம் திகதி யாழ் நகரமண்டபத்திலும், அடுத்த மாதம் 2-ம் திகதி சாவகச்சேரியிலும், 4-ம் திகதி வந்தாறுமூலையிலும், 5-ம் திகதி மட்டக்களப்பு நகரமண்டபத்திலும் மேடையேற்றப்பட விருக்கின்றது.

இயற்கை மரணங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

மட்டுவில் வடக்கைச்சேர்ந்த அருணாசலம் சின்னத்தம்பி பொன்னுச்சாமி என்பவருடைய மனைவி மல்லிகாதேவி (22 வயது) நெஞ்சில் ஏற்பட்ட நோய் காரணமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

இதுசம்பந்தமாக மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். களகரத்தினம் விசாரணைநடத்தியபோது டாக்டர் சி. சண்முகநாதன் மாரடைப்பால் ஏற்பட்ட மரணமெனத் தெரிவித்ததனைத் தொடர்ந்து மரண விசாரணை அதிகாரி இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நாகலிங்கம் (88 வயது) என்பவரும் இதேபோல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். களகரத்தினம் விசாரணை நடத்தியபோது டாக்டர் ஆர். பரமதாசன் மாரடைப்பால் ஏற்பட்ட மரணமெனக் கூறினார். இயற்கை மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

குழந்தையின் பரிதாப மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஒரு வயதுக் குழந்தை பொன்று கஞ்சிச் சட்டிக்குள் விழுந்ததனால் உடல் வெந்து மரணமான பரிதாப சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பீச் ரோட்டில் உள்ள அரசினரின் ஆரோக்கிய நாதர் என்பவருடைய குழந்தையான அன்ரனியே இவ்வாறு பரிதாப மரணத்திற்குள்ளானதாகும் மரண விசாரணை அதிகாரி திரு எஸ். களகரத்தினம் இது சம்பந்தமாக விசாரணை நடத்தினார். விசாரணையின்போது குழந்தையின் தயாரான மேரி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

மத்தியானம் கஞ்சி வடித்து விட்டு வெளியே வந்தசமயம் அன்ரன் கஞ்சிச் சட்டியில் தவறி விழுந்துவிட்டார். கை, கால், முகம், கழுத்து கஞ்சிக் குட்டிலேவெந்துவிட்டன. உடனாஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். குழந்தை மரணமாகிவிட்டது. டாக்டர் டி. விஜயவர்த்தினம் உடல் வெந்ததனால்மரணம் சம்பவித்தது எனக் கூறினார். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். களகரத்தினம் விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

இடமாற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் கல்கப்பகுதியைச் சேர்ந்த ஏ. அல்பிரட், நெல்லியப்பர் ஆகியோர் கொழும்பு கல்கப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பரிசளிப்பு வைபவம்

கழிபுரம், ஞாயிறு

'பேச்சும்திறனும் இசை நலமும் உள்ளத்தை வளம்படுத்தும் சாதனங்கள். வளரும் சமுதாயம், கல்வித்துறையில் பேச்சுக்கும் இசைக்கும் நல்லிடம் அளித்து வளர்ப்பது விரும்பத்தக்கதொன்றாகும்' என்று, யாழ்மேற்கு ஆசிரியர் சங்கப் பரிசளிப்பு விழாவில் சங்கத் தலைவர் திரு. எம். மகேசன் கூறினார். தரமைப் பத்திரங்களும் வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டன. செயலாளர் திரு. சி. வைரமுத்து நன்றி கூறினார்.

கடாங்காவில் ஷோம்பேக்கு வெற்றி

லிவர்பூல்வில்லி, மார்ச் 29

காங்கோ சதந்திரமடைந்த பின்னர், இப்பொழுது நாட்டின் பல பகுதிகளிலும் தேர்தல்கள் நடைபெற்றுவருகின்றன. காங்கோ பிரதமர் திரு ஷோம்பேயின் சொந்த மாகாணமான கடாங்காவில் அவருக்கு அமோகவெற்றி கிடைத்திருக்கின்றது.

நூடானில் துன் ரஸாக்

குலாலம்பூர், மார்ச். 29

மலேசியா பிரச்னையின் உண்மை நிலையை பல நாடுகளுக்கும் தெளிவாக விளக்கிவரும் மலேசிய துணைப் பிரதிமர் துன் அப்துல்ரஸாக் இன்று குலாலம்பூர் வந்தடைந்தார். இதற்கு முன்னர் அவர் இந்தியாவுக்குச் சென்றிருந்தார்.

மனுபாய்ஷா திரும்பினார்

புதுடில்லி, மார்ச், 29

இந்திய வர்த்தக மந்திரி திரு.மனுபாய்ஷா,நியூஸிலாந்து ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு விஜயஞ்செய்துவிட்டு இன்று புதுடில்லி திரும்பினார். இந்த நாடுகளிலும் இவர் பொருளாதார ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார்

இப்பத்திரிகை சுதந்திரன் லிமிடெட் ஸ்தாபனத்தார் [illegible] பத்தகாளம் சிவன்கோவில் மேலை வீதி 58-ம் இலக்கத்தில் [illegible] 1955-ம் ஆண்டு மார்ச் [illegible]